நடைபெறாதிருக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எல்லா ஆட்சிக் காலங்களிலும் அவ்வப்போது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன. சொந்தப் பிரச்சினைக்காக இவ்வாறு நடைபெறுகிறதே தவிர, மற்றபடி அல்ல. இருந்தாலும், அதைக் கட்டுப்படுத்தி, இனி அதுமாதிரி சம்பவங்கள் நடைபெறாது பார்த்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (அ) கொரோனா வைரஸ் நோய் பரவுதலைத் தடுப்பதற்கு மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துதல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று இங்கே corona virus பற்றிச் சொன்னார்கள். நேற்றையதினம்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் corona virus பற்றி இங்கே குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து மாலையிலேயே அதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக அதுகுறித்து தெரிவித்தார். அதிலே உள்ளே செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதைப்பற்றி இங்கே தெரிவித்தார்கள். அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. Corona virus தடுப்பு நடவடிக்கையில் அரசு முழுவீச்சுடன் ஈடுபட்டுவருகின்றது. ஆகவே என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ அத்தனை தடுப்பு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. அதைத்தான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார். அச்சப்பட வேண்டிய அவசியமே இல்லை. கிட்டத்தட்ட 8 கோடி பேர் இருக்கின்ற தமிழகத்தில், இந்த நோயினால் இப்பொழுது ஒருவர்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார். நோய் எல்லோருக்கும் வருகிறது. இன்னும் சொல்லப் போனால் அனைவருமே மருத்துவமனையில் போய் பரிசோதனை செய்துகொண்டிருக்கிறோம். நானும் மருத்துவமனையில் போய் பரிசோதனை செய்திருக்கிறேன். நீங்களும் அடிக்கடி மருத்துவமனைக்குப் போய் பரிசோதனை செய்துகொண்டிருக்கிறீர்கள். நோய் வருவது இயற்கை, அதை யாராலும் தடுக்க முடியாது. ஏதோ ஒரு ரூபத்தில் அனைவருக்கும் நோய் வருகிறது. ஆனால், இந்த வைரஸ் நோய் அபாயகரமான நோய் என்று உலக நாடுகளிலிருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 110 நாடுகளில் நோய் பரவியுள்ளதாக செய்திகள் வருகின்றன. ஆகவே, இதை வைத்துக்கொண்டுதான்

2020 மார்ச் 17] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இந்த அவையில் தெரிவித்தனர். அதற்குண்டான முழு விளக்கத்தையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அரசு எந்தெந்த வகையில் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்ற விவரங்கள் முழுவதையும் தெரிவித்துள்ளார். ஆகவே, இதில் அச்சப்பட வேண்டிய தேவையே இல்லை. ஆகவே, சட்டமன்றத்தை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் முழு பாதுகாப்பு வழங்கப்படும். வேண்டுமெனில் உங்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல நாம் சட்டமன்றத்திற்குள்ளே வருகின்றபொழுதுகூட பரிசோதனை செய்துதான் நம்மையும் அனுப்புகிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

### (ஆ) தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவுவதைத் தடுத்தல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

முற்பகல் 11–50

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெடிகுண்டு சமாச்சாரத்தைச் சொல்லுகிறபோது, இப்படி ஒரு கலாச்சாரம் உருவாகியிருக்கிறது, இதை முளையிலேயே தடுக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, இந்த ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு சரியில்லை என்றோ அல்லது நீங்கள் கவனிக்கவில்லை என்றோ சொல்லவில்லை. நடைபெறுகிற சம்பவங்களை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதைக் கட்சி சார்பற்ற முறையிலே சொன்னேன். ஆனால், உடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள், இது எல்லா ஆட்சியிலும் நடக்கும், உங்கள் ஆட்சியில் நடக்கவில்லையா என்று கேட்கிறார். நான் ஒன்று சொல்கிறேன். இது எல்லா ஆட்சியிலும் நடக்கும். ** ஆகையினால், எந்த ஆட்சியில் நடக்கவில்லை? ஆனால், இந்தப் பதில் சரியில்லை என்பதுதான் என் கருத்து. காரணம், எங்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.